Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC 35/2024** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW5 /LW5** |
| **Name** | .. | திரு.G. ஆசைத்தம்பி |
| **Father's/Husband's Name** | .. | திரு. K.குருசாமி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **41** |

**Date: 24/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண்.72 5வது தெரு, துர்கை அவென்யூ, சேலவாயல், என்ற முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது தங்கையின் கணவர். 20.02.2014 அன்று எனது தங்கைக்கும் ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணமான 6 மாத காலம் நன்றாக வாழ்ந்து வந்தார்கள். அதன்பின்பு ஆஜர் எதிரி எனது தங்கையிடம் நகை கேட்டு பிரச்சனை செய்தார். எதிரி அடிக்கடி எனது தங்கையை அடித்தார். 2023 அன்று ஏப்ரல் மாதம்

தேதி ஞாபகம் இல்லை. எனது தங்கையின் மகள் எனது அம்மாவிற்கு போன் செய்து தனது அம்மா மயங்கி கிடப்பதாக சொன்னார். உடனே நான் எனது தாய் தந்தை ஆகியோர் எனது தங்கையின் வீட்டிற்கு சென்றோம். வீட்டு வாசலின் கதவு அருகே சுயநினைவில்லாமல் எனத தங்கை கிடந்தார். பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஸ்டான்லி மருத்துவமனைக்கு எனது தங்கையை அழைத்துச்சென்றோம்.

2. எனது தங்கையை விசாரித்த போது ஆஜர் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் நகை கேட்டு பிறச்சனை செய்து அடித்து தள்ளிவிட்டு இருசக்கர வாகனத்தில் மோதியதாக சொன்னார்.

3. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

4. இதற்கு முன்னால் சாட்சியம் அளித்தவர்கள் எனது தாய். தந்தை மற்றும் சகோதரர் ஆவர் என்றால் சரிதான். சமாதானம் பேச சென்ற போது இவ்வாறு எதிரி குடும்பத்தார் அடித்த சங்கதியை போலீஸ் விசாரணையில் சொல்லாமல் தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. சம்பவத்தை பற்றி நேரிடையாக எனக்கு தெரியாது என்றாலும் எனது தங்கை சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

6. எனது தங்கையின் கணவர் நல்ல வசதி வாய்ப்போடு தான் இருக்கிறார் என்றால் சரிதான். வசதி வாய்ப்புகள் இருப்பதால் உங்கள் தங்கையிடம் நகை கேட்கவேண்டிய அவசியம்மில்லை என்றாலும் புகார்

தாரர் உங்களுடைய தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. ஒரு வேலை அது போல் சம்பவம் நடந்திருந்தால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், உறவுக்காரர்களும் அங்கு வந்து அது பற்றி கேட்டிருப்பார்கள் என்றால் பலமுறை இது போல் நடந்துள்ளது. இருமுறை கேட்டுள்ளார்கள். சம்பவத்தன்று யாரும் கேட்கவில்லை.

8. திருமணம் நடந்து 11 வருடம் ஆகிறது என்றாலும் அன்று முதல் இந்நாள் வரை அவர்தான் தனது மனைவி பிள்ளைகளை பார்த்துவருகிறார் என்றாலும் நீங்கள் அவர்களை ஒரு போதும் பார்த்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

9. உங்கள் தங்கையை  எதிரி துன்புறுத்தவோ, நகையோ, பணமோ கேட்டவில்லை என்றாலும் அவர் உங்கள் தங்கையை நல்ல முறையில் தான் பார்த்துக்கொண்டு வந்தார் என்றால் சரியல்ல.

10. சம்பவம் நடந்த இடத்திற்கு நீங்கள் நேரில் செல்லவில்லை என்றாலும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2025.09.24 17:22:41 +0530

நீதித்துறைநடுவர்,

திருவொற்றியூர்